_DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
MCOP .No. 120/2018
****

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | RW2 |
| Name | : | மகேஷ்குமார் |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 30.09.2024 |

Solemnly affirmed by Thiru.V.Balasubramanian, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இம்மனுவின் எதிர்மனுதார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். நான் எதிர்மனுதார் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். பதிவு எண் இல்லாத சிவப்பு நிற யமாஉறா பேசினோ என்ற இருசக்கர வாகனத்திற்குரிய காப்பீடு சான்று உண்மை நகல் **எ.மா.சா.ஆ.2** ஆகும். மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்

**மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்திற்குள்ளான இருசக்கர வாகனத்தின் காப்பீடு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பதிவு செய்யப்படாத புதிய வாகனத்திற்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

காப்பீடு செய்யப்பட்ட தேதி 14.03.2018 ல் இருந்து 13.03.2019 வரை காலகட்டம் என்றால் சரிதான். காப்பீடு வண்டி, வண்டியின் உரிமையாளர் மற்றும் 3 ம் நபருக்கு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகனத்திற்கும் 3 ம் நபருக்கான காப்பீடு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது உரியையாளருக்கு பொருந்தாது. மேற்படி காப்பீடு உரிமையாளருக்கும் பொருந்தக்கூடியது என்றால் சரியல்ல. உரிமையாளர் 3 ம் நபர் அல்ல. வாகனத்திற்கு விபத்தினால் இறந்த உரிமையாளருக்கு விபத்தினால் ஏற்பட்ட இழப்பீடு தொகை கொடுக்க நீங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள விபத்தினால் இறந்த பெருங்கோட்டூர்செல்விக்கு இழப்பீடு தொகை கொடுக்க எங்கள் நிறுவனம் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. வாகனத்திற்குரிய காப்பீடு சான்றிதழில் வாகனம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் PA coverage குறிப்பிட தவறிய காரணத்தினால் வாகனத்தின் உரிமையாளருக்கு இழப்பீடு கொடுக்க நீங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**ம.வி** **இல்லை.**